**மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம், கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி, திண்டுக்கல் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. பாரதி, M.L.,**
**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

**2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**மோ.வா.வி.கோ.மனு எண் – 244/2018**

**(திருவள்ளுவராண்டு 2057 பராபவ வருடம் சித்திரை மாதம் 08 ஆம் நாள்)**

**[TNDG07 – 001329 – 2018]**

R. வேலுச்சாமி --- மனுதாரர்

எதிர்

1. P. தீனதயாளன்
2. கிளை மேலாளர்,
தி நியூ இந்தியா அஸ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,
உடுமலைப்பேட்டை
(பாலிசி எண் : 72220131180200004338) --- எதிர்மனுதாரர்கள்

இந்த மனுவானது 18.12.2018 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 16.02.2026 ஆம் தேதியன்று என் முன்னர் இறுதி விசாரணைக்காக வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் S. தினேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர் அழைத்தும் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக இருந்தும், 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர் A.M.அப்துல்கரீம் அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்கள் கேட்டும், மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகை ரூ.3,00,000–ஐ 12 சதவீதம் வட்டியுடன் செலுத்திவைக்க உத்தரவிடக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்

தொகையை மனுதாரருக்கு, எதிர்மனுதாரர்கள் செலுத்திவைக்கக்கோரியும் மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் இயக்கூர்திச் சட்டம் 1988–ன் பிரிவுகள் 140, 141, 142, 163(எ) 163(பி), 166 மற்றும் 182(எ) தமிழ்நாடு இயக்கூர்தி விபத்துக் கோருரிமைத் தீர்ப்பாணை விதிகள் 1989 விதி 3(1)–ன்படி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம் பின்வருமாறு : –</u>

2.1. மனுதாரர் கடந்த 20.08.2018 அன்று மாலை 7.15 மணியளவில் மனுதாரர் அவரது வேலையை முடித்துவிட்டு பழனி – திண்டுக்கல் ரோட்டில் ஓபுளாபுரம் இஞ்சி டீ கடை அருகே வரும்போது மனுதாரர் ரோட்டை தெற்கிலிருந்து வடக்காக நடந்து கடக்கும்போது ரோட்டின் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த 1–ம் மனுதாரருக்குச் சொந்தமான TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் பழனியைச் சேர்ந்த சுப்பையா மகன் மோகன்குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதியதில் மனுதாரர் தூக்கி எறியப்பட்டு கீழே விழுந்ததில் மனுதாரருக்கு வலது கால் முட்டிக்குக் கீழ் பலத்த இரத்தக்காயம் ஏற்பட்டும், எலும்பு முறிவு ஏற்பட்டும், வலது கையில் சிராய்புக் காயமும், தலையின் பின்பக்க ஊமைக்காயமும், முகம் முழுவதும் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டு உடனே 108 ஆம்புலன்ஸ் மூலம் பழனி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்பு மதுரை இராஜாஜி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும், அதன்பின்பு தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றும், அதன்பின்பு வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்று வருகிறார். மேற்படி விபத்தில் மனுதாரரின் வலதுகால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டு மனுதாரருக்கு போல்டு பொருத்தப்பட்டுள்ளதால் மனுதாரரால் முன்புபோல் சரியாக நடக்க முடியாமல் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார். விபத்தினால் ஏற்பட்ட அதிர்ச்சியில் இருந்து மனுதாரர் இன்னும் மீளவில்லை. மேற்படி விபத்தினால் மனுதாரரின் பொருளீட்டும் திறன் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வருமான இழப்பு விபத்தினால் ஏற்பட்ட வலி துன்பம் விபத்தினால் ஏற்பட்ட நிரந்தர ஊனம், பொருளீட்டும் திறன் இழந்தமை ஆகியவை முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மனுதாரருக்கு வருமான இழப்பு,

விபத்தினால் ஏற்பட்ட வலி துன்பம் விபத்தினால் ஏற்பட்ட நிரந்தர ஊனம், பொருளீட்டும் திறன் இழந்தமை, மருத்துவமனைக்குச் சென்று வருவதற்கான போக்குவரத்துச் செலவு, கூடுதல் சத்துணவு செலவு ஆகியவைகளுக்கு மொத்த இழப்பீடு ரூ.4,56,000/- ஏற்பட்டதில் மனுதாரர் ரூ.3,00,000/- மட்டும் இழப்பீடு கோரி இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளார். 1-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும், மேற்படி விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்து ஏற்படுத்திய வாகனம் 1-ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தானது. மேற்படி வாகனம் 2-ம் எதிர்மனுதாரரின் காப்பீட்டு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டிருப்பதாலும், மனுதாரருக்கு செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர்கள் சேர்ந்தும், தனித்தனியாகவும் செலுத்திவைக்கக் கடமைப்பட்டுள்ளனர். மேற்படி விபத்து சம்மந்தமாக 1-ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் மீது ஆயக்குடி காவல் நிலையத்தில் குற்ற எண்.299/2018-ல் இ.த.ச. பிரிவுகள் 279, 337-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

<u>3. 2-ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையின் சுருக்கம் பின்வருமாறு : -</u>

3.1. மனுவில் விபத்து நிகழ்ந்த விதம் குறித்து விவரித்துள்ளது சரியானதல்ல. அதனை மனுதாரர் ஆவணங்களுடன் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். மனுதாரர் முக்கியமான உண்மைகளை மறைத்துள்ளார். காயமடைந்த நபரின் வயது, தொழில் மற்றும் மாத வருமானத்தை 2-ம் எதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளவில்லை. அவற்றை ஆவணச் சான்றுகளின் மூலம் மனுதாரர் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும். இந்த விபத்தே காயங்களுக்கு நேரடி காரணம் என்பதை மனுதாரர் நிரூபிக்க வேண்டும். மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானதும், தவறானதும் ஆகும். மேற்படி விபத்து குறித்து மனுதாரர் சரியாக விளக்கவில்லை. மேற்படி விபத்துக்கு முழுமையாக மனுதாரரே காரணம். 1-வது எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் ஒலி எழுப்பி, சாலை போக்குவரத்து விதிகளை கடுமையாக கடைப்பிடித்து சாலையின் இடப்புறமாக மெதுவாகவும், கவனமாகவும்

மோட்டார் சைக்கிளை ஓட்டிவந்தார். அந்த நேரத்தில் மனுதாரர் திடீரென மேற்கில் இருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் பிரதான சாலையில், தெற்கிலிருந்து வடக்கு நோக்கி மோட்டார் சைக்கிளை கவனிக்காமல் சாலையை கடக்க முயன்றதால் அவர் தன்னாலேயே விபத்துக்குள்ளாகினார். மேற்படி விபத்து மனுதாரரின் தவறால் மட்டுமே ஏற்பட்டது. 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் எந்த வகையிலும் இந்த விபத்திற்குப் பொறுப்பல்ல. எனவே 2–ம் எதிர்மனுதாரர், மனுதாரருக்கு எந்த இழப்பீடும் வழங்கவேண்டிய பொறுப்பு இல்லை. மனுதாரர் முதலில் பழனி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு முதலுதவி அளிக்கப்பட்டு பின்னர் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டு அங்கு உள்நோயாளியாக சிகிச்சை பெற்று பின்னர் தனியார் மருத்துவமனையில் உளிநோயாளியாகவும் மற்றும் வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்றதாகச் சொல்வது அனைத்தும் பொய்யானவை. மனுதாரர் கூலித் தொழிலாளியாக மாதம் ரூ.12,000/– சம்பாதித்தார் என்பதும், விபத்திற்கு பிறகு வழக்கமான வேலை செய்ய முடியவில்லை என்பதும், நிரந்தர ஊனமுற்றார் என்பவை அனைத்தும் பொய்யானவை. மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகமானது ஆகும். மோட்டார் வாகனத்தின் உரிமையாளர் இந்த விபத்தை ஏற்படுத்தவில்லை. மனுதாரர் அல்லது 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து காப்பீட்டு பாலிசி மற்றும் பதிவுச் சான்றிதழ் நகல் கிடைக்காத காரணத்தால் விபத்து நேரத்தில் அந்த பாலிசி மற்றும் பதிவு சான்றிதழ் நடைமுறையில் இருந்ததா என்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. எனவே மனுதாரருக்கு எந்த இழப்பீடும் வழங்க இந்த எதிர்மனுதாரருக்கு பொறுப்பு அல்ல. 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனருக்கு விபத்து நடந்த தேதி மற்றும் நேரத்தில் செல்லுபடியாகும் ஓட்டுனர் உரிமம் இல்லை. இதனால் 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் காப்பீட்டு நிபந்தனைகளை மீறியுள்ளார். ஆகையால் மனுதாரருக்கு எந்த இழப்பீடும் வழங்க 2–ம் எதிர்மனுதாரர் கடமைப்பட்டவரல்ல. இம்மனு மிகுந்த யூகங்களின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எந்தவித நியாயமும் இல்லாததாகவும் இருப்பதால் இம்மனு தள்ளுபடியாக வேண்டும்.

**4. இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட வாதுரை மற்றும் இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் முன்வைத்த வாதத்தின் அடிப்படையின் கீழ் வழக்கு கோப்புகள் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.**

**இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தானது TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar என்ற இருசக்கர வாகனத்தை ஒட்டி வந்த ஓட்டுநரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் நிகழ்ந்ததா?
2. மனுவில் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை எதிர்மனுதாரர்கள் செலுத்தக் கடமைப்பட்டவர்களா?
3. மனுதாரருக்கு எவ்வளவு தொகை இழப்பீடாக கிடைக்கத்தக்கது?

**7. இருதரப்பிலும் முன்னிலைப்படுத்திய சாட்சிய சான்றாவணங்களின் விவரங்கள் :–**

7.1. இம்மனுவில் மனுதாரர் தரப்பு வழக்கை நிரூபணம் செய்வதற்கு மனுதாரர் திரு. வேலுச்சாமி என்பவர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு. ஹரிஹரன் என்பவர் எ.ம.சா.1 ஆகவும், 2–ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தின் முதுநிலை உதவியாளர் திரு. பன்னீர்செல்வம் என்பவர் எ.ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, அவர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீ.ம.சா.ஆ.1 சான்றாவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**8. பிரச்சனை எண்.1–க்கான தீர்வு:–**

8.1. மனு, எதிருரை, சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பில் முன்வைக்கப்பட்ட வாதங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர் கடந்த 20.08.2018 அன்று மாலை 7.15 மணியளவில் மனுதாரர் அவரது வேலையை முடித்துவிட்டு பழனி – திண்டுக்கல் ரோட்டில் ஒபுளாபுரம் இஞ்சி டீ கடை அருகே வரும்போது மனுதாரர் ரோட்டை தெற்கிலிருந்து வடக்காக நடந்து கடக்கும்போது ரோட்டின் மேற்கிலிருந்து

கிழக்கு நோக்கி வந்த 1–ம் மனுதாரருக்குச் சொந்தமான TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் பழனியைச் சேர்ந்த சுப்பையா மகன் மோகன்குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஹாரன் அடிக்காமலும் ஓட்டி வந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டதாக மனுவிலும், மனுதாரரின் பிரமாண வாக்குமூலத்திலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் சாட்சியத்தை மறுப்பதற்கு குறிப்பாக காரணங்கள் எதுவும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தெரிவிக்கப்படவில்லை. ம.சா.ஆ.1 ஆயக்குடி காவல் நிலையக் குற்ற எண்.199/2018–ன் பேரிலான முதல் தகவல் அறிக்கை நகலைப் பரிசீலித்ததில், மனுதாரர் வேலுச்சாமி அளித்த புகாரின் பேரில் TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான மோகன்குமார் என்பவர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 மனுவின் சங்கதிகளையும் மனுதாரரின் சாட்சியத்தையும் அனுசரித்து அமைந்துள்ளது. ம.சா.ஆ.3 ஆன வாகன பதிவுச் சான்றைப் பரிசீலிக்கையில், மேற்படி TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் 1–ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானது என்பதும் அறிய முடிகிறது. ம.சா.ஆ.4 காப்பீட்டுச் சான்றைப் பரிசீலிக்கையில், TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் 1–ம் எதிர்மனுதாரர் பெயரில் காப்பீடு செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. ம.சா.ஆ.1, ம.சா.ஆ.3 மற்றும் ம.சா.ஆ.4 ஆகியவற்றைப் பரிசீலித்ததில், 1–ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரான மோகன்குமார் என்பவர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், சாலை விதிகளுக்கு முரணாகவும் ஓட்டிவந்து மனுதாரர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்பதை அறிய முடிகிறது. எனவே, 2–ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமான வாகனத்தின் ஓட்டுநரான மோகன்குமார் என்பவரின் அதிவேகம் மற்றும் அஜாக்கிரதை தான் விபத்திற்கு காரணம் என முடிவு செய்து அவ்வாறே 1–வது பிரச்சனைக்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**<u>9. பிரச்சனை எண்.2–க்கான தீர்வு:–</u>**

9.1. TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர

வாகனம் 1–ம் எதிர்மனுதாரருக்குச் சொந்தமானது என்றும், 2–ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் என்றும், மேற்படி எதிர்மனுதாரர்கள் இருவரும் சேர்ந்தும், தனித்தனியாகவும் இழப்பீடாக ரூ.3,00,000/–ஐ மனுதாரருக்குக் கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் மனுதாரர் தரப்பில் வாதிடப்பட்டது. 2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் விபத்து நடந்த சமயத்தில் TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த 1–ம் எதிர்மனுதாரரின் ஓட்டுனர் மோகன்குமார் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். இதுகுறித்து பரிசீலிக்கையில், எ.ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ள பழனி வட்டார போக்குவரத்து அலுவலக இளநிலை உதவியாளர் திரு. ஹரிஹரன் என்பவர் தனது சாட்சியத்தில், **"எங்களுடைய கணிணி மற்றும் ஆவணங்களைத் தேடிப்பார்த்ததில் அவருக்கு எவ்வித ஓட்டுனர் உரிமமும் வழங்கப்படவில்லை"** என சாட்சியம் அளித்துள்ளார். எனவே வாகனத்தின் உரிமையாளரான 2–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் திரு. மோகன்குமார் என்பவர் மோட்டார் வாகனச் சட்டத்தையும், காப்பீட்டு விதிமுறைகளையும் மீறியுள்ளார் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. ம.சா.ஆ.4 மற்றும் எ.ம.சா.ஆ.3 ஆவணங்களைப் பரிசீலித்ததில், TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனம் 2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது தெளிவாகிறது. விபத்து நடந்த 20.08.2018 அன்று காப்பீடு அமலில் இருந்துள்ளது மேற்படி ஆவணங்களைப் பரிசீலித்ததில் தெரியவருகிறது. அதேசமயம் 1–ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுனர் திரு. மோகன்குமார் என்பவர் TN 78 W 6480 என்ற பதிவு எண் கொண்ட Bajaj Pulsar இருசக்கர வாகனத்தை ஓட்டுனர் உரிமம் இல்லாமல் பொதுச்சாலையில் மேற்படி வாகனத்தை இயக்கியதால், பாலிசி விதிமுறை மீறல் ஏற்பட்டுள்ளது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்துள்ளதால், 2–ம் எதிர்மனுதாரர் இழப்பீடு செலுத்த வேண்டுமென்றும், அவ்வாறு செலுத்தும் தொகையை, 1–ம் எதிர்மனுதாரரிடமிருந்து திருப்பி வசூலித்துக்கொள்ள அனுமதித்து உத்திரவிடலாம் என முடிவு செய்யப்பட்டு அவ்வாறே பிரச்சனை எண்.2–க்கு தீர்வு காணப்படுகிறது.

**10. பிரச்சனை எண்.3–க்கான தீர்வு:–**

10.1. விபத்தினால் மனுதாரருக்கு வலது கால் முட்டிக்குக் கீழ் எலும்பு

முறிவு ஏற்பட்டும், வலது கையில் சிராய்ப்புக் காயமும், தலையின் பின்பக்கம் ஊமைக்காயமும், முகம் முழுவதும் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டுள்ளது என்றும், பழனி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, பின்பு மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாகவும், வெளிநோயாளியாகவும் சிகிச்சை பெற்றும், வலதுகால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டு மனுதாரருக்கு போல்டு பொருத்தப்பட்டுள்ளதாகவும் ம.சா.1–ன் சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஆன மதுரை இராஜாஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவக் குறிப்பை பரிசீலித்ததில், மனுதாரருக்கு வலது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டும், வலது கையில் சிராய்ப்புக் காயமும், தலையின் பின்பக்கம் ஊமைக்காயமும், முகம் முழுவதும் சிராய்ப்புக் காயமும் ஏற்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி விபத்தினால் மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் மருந்து மாத்திரை வகைகளில் மனுதாரருக்கு ரூ.35,000/–க்கு மேல் செலவாகியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேற்படி சங்கதிக்கு ஆதரவாக எவ்வித மருத்துவக் குறிப்புகளும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

10.2. மனுதாரர் தன் மனுவில் தனக்கு நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக மனுவில் தெரிவித்துள்ளார். மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்டுள்ள உடல் குறைபாட்டை எடுத்துக் கூறுவதற்கு மருத்துவர் எவரும் சாட்சியாக விசாரிக்கப்படவில்லை. ஆவணங்களை மட்டுமே தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் ஊனச்சான்றிதழ் நீ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. திண்டுக்கல் அரசு மருத்துவமனையின் சேர்மனால் மனுதாரர் பரிசோதனை செய்யப்பட்டு குறைபாடு குறித்து சான்று வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரின் ஊனக்குறைபாடு 20 சதவீதம் என்று மருத்துவக் குழுமம் சான்று வழங்கியுள்ளது. மேற்படி ஊனக்குறைபாடு சான்றிதழ் குறித்து எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுப்பு ஏதும் தெரிவிக்கவில்லை. எனவே விபத்து மூலம் மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களினால் மனுதாரருக்கு 20 சதவீதம் உடல் ஊனக்குறைபாடு ஏற்பட்டுள்ளது என்று இத்தீர்ப்பாயம் தீர்மானிக்கிறது. எனவே <u>20 x ரூ.5,000/– = ரூ.1,00,000/–</u> பணம் ஊனக்குறைபாட்டுக்காகப் பெற மனுதாரர் தகுதியுடையவர்.

10.3. மனுதாரருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயங்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. அவர் பழனி அரசு மருத்துவமனை மற்றும் மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் 20.08.2018 முதல் 22.09.2018 வரை சிகிச்சை பெற்றுள்ளார். ஆகவே மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள **வலி மற்றும் துன்பத்திற்காக ரூ.20,000/-** பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

10.4. மனுதாரரின் **வசதி குறைவுக்காக ரூ.10,000/-** பணம் கிடைக்கத்தக்கது என தீர்மானிக்கப்படுகிறது.

10.5. மனுதாரருக்கு ஏற்பட்டுள்ள காயங்களில் இருந்து மீண்டு வருவதற்கு அவருக்கு கூடுதல் சத்துணவு அளிக்கப்படுவது அவசியமாகும். ஆகவே **கூடுதல் சத்துணவு அளிப்பதற்கான செலவு ரூ.10,000/-** மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது.

10.6. மனுதாரர் பழனி அரசு மருத்துவமனையிலும், பின்னர் மேல்சிகிச்சைக்காக மதுரையில் இராஜாஜி அரசு மருத்துவமனையில் 20.08.2018 முதல் 22.09.2018 வரை உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தபோதும், அதன் தொடர்ச்சியாகவும் மனுதாரரின் உதவிக்கு அடிப்படை தேவைக்காக Attender இருந்திருப்பார். எனவே **Attender கட்டணமாக ரூ.10,000/-** பணம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதாகும்.

10.7. மனுதாரருக்கு விபத்து ஏற்பட்டு அவர் சிகிச்சைக்காக விபத்து ஏற்பட்ட இடத்திலிருந்து மதுரையில் உள்ள இராஜாஜி அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் போக்குவரத்து செலவிற்கான இரசீது எதுவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

10.8. விபத்து சமயத்தில் மனுதாரர் கூலி வேலை செய்து வருவதன் மூலம் மாதம் ரூ.12,000/- சம்பாதித்து வந்தார் என்பதை நிரூபிக்க எவ்வித சாட்சிய சான்றாவணமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை.

10.9. விபத்தின்போது மனுதாரர் மருத்துவ சிகிச்சையில் இருந்த சமயம் வருமான இழப்பீடாக **ரூ.8,000/-** வீதம் இரண்டு மாத காலத்திற்கு **ரூ.16,000/-** கிடைக்கத்தக்கது.

| | | | |
|---|---|---|---|
| 20% நிரந்தர ஊனத்திற்காக (20 x 5000) | : | ரூ. | **1,00,000.00** |
| வலி மற்றும் துன்பத்திற்காக | : | ரூ. | **20,000.00** |
| வசதி குறைவிற்காக | : | ரூ. | **10,000.00** |
| கூடுதல் ஊட்டச்சத்துக்காக | : | ரூ. | **10,000.00** |
| உதவியாளர் செலவுக்காக | : | ரூ. | **10,000.00** |
| வருமான இழப்பீடாக [ரூ.8000 x 2 = ரூ.16,000] | : | ரூ. | **16,000.00** |
| **மொத்தம்** | : | **ரூ.** | **1,66,000.00** |

11. மேற்சொன்ன பல்வேறு வகைகளில் மனுதாரருக்கு ஆக மொத்தம் **ரூ.1,66,000/-** பணம் கிடைக்கத்தக்கது என்று தீர்ப்பாயம் இந்த பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**12. முடிவில், இம்மனு செலவுத் தொகையுடன் பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.**

1. மனுதாரருக்கு இழப்பீட்டுத் தொகை **ரூ.1,66,000/-**ஐ (ரூபாய் ஒரு லட்சத்து அறுபத்தி ஆறாயிரம் மட்டும்) 2-ம் எதிர்மனுதாரர் செலுத்தவேண்டுமென்றும்,
2. 2-ம் எதிர்மனுதாரர் அவ்வாறு செலுத்தும் தொகையை 1-ம் எதிர்மனுதாரரிடமிருந்து திருப்பி வசூலித்துக்கொள்ள அனுமதியளித்தும்,
3. மேலும் 2-ம் எதிர்மனுதாரர் இழப்பீட்டுத் தொகைக்கு ஆண்டொன்றுக்கு 7.5 சதவீதம் வட்டியுடன் இம்மனு தாக்கல் செய்யப்பட்ட **04.12.2018** ஆம் தேதியிலிருந்து **11.01.2022** ஆம் தேதி வரையிலும், பின்னர் **17.02.2025** ஆம் தேதி முதல் தீர்வுத் தொகை வசூலாகும் தேதி வரையும் மனுதாரருக்குச் செலுத்த வேண்டுமென்றும், மனுதாரரின் தவறுகையால் மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ள **11.06.2024** ஆம் தேதி முதல் மீண்டும்

**விசாரணைக்கு எடுக்கப்பட்டுள்ள 16.02.2025 ஆம் தேதி வரையும் இழப்பீட்டுத் தொகைக்கு வட்டி ஏதும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், மேலும் வழக்கானது விசாரணைக்கு வைக்கப்பட்டு மனுதாரர் வழக்கை நடத்தாமல் காலதாமதம் ஏற்படுத்திய 11.01.2022 ஆம் தேதி முதல் 10.06.2024 ஆம் தேதி வரையும் இழப்பீட்டுத் தொகைக்கு வட்டி ஏதும் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும்,**

4. இழப்பீட்டுத் தொகையை 2–ம் எதிர்மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் பழனி, பாரத ஸ்டேட் வங்கிக் கணக்கு எண். **C.A.43562037419 (IFSC Code No: SBIN0000894)**-ல் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தியபின் மொத்த இழப்பீட்டுத் தொகையான **ரூ.1,66,000/–** ஐ வட்டி மற்றும் செலவுத் தொகையுடன் மனுதாரர் உடனடியாக பெற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.
5. பாக்கி நீதிமன்ற கட்டணத்தை மனுதாரர் இன்றைய தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும்.
6. வழக்கறிஞர் கட்டணம் **ரூ.6,320/-** என நிர்ணயம் செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு உரைக்கப்பட்டு, அவரால் நேரடியாகக் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.04.21 14:52:58 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**

| **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் : –</u>** | | |
|---|---|---|
| ம.சா.1. | : | திரு. வேலுச்சாமி – (மனுதாரர்) |

| **<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –</u>** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **தேதி** | **சான்றாவண விபரம்** | **குறிப்பு** |
| ம.சா.ஆ.1 | 20.08.2016 | முதல் தகவல் அறிக்கை | உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 20.08.2018 | மதுரை இராஜாஜி மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவக் குறிப்பு நோட்டு | அசல் |
| ம.சா.ஆ.3 | 04.07.2014 | 1–ம் எதிர்மனுதாரர் வாகனப் பதிவுச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.4 | 01.08.2018 | காப்பீட்டுச் சான்று | நகல் |
| ம.சா.ஆ.5 | --- | மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது) | நகல் |

| **<u>நீதிமன்ற சான்றாவணம் : –</u>** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **தேதி** | **சான்றாவண விபரம்** | **குறிப்பு** |
| நீ.ம.சா.ஆ.1 | --- | ஊனச்சான்றிதழ் | அசல் |

| **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி : –</u>** | | |
|---|---|---|
| எ.ம.சா.1. | : | திரு. ஹரிஹரன் – (பழனி வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரியும் இளநிலை உதவியாளர்) |
| எ.ம.சா.2. | : | திரு. பன்னீர்செல்வம் – (2–ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தின் முதுநிலை உதவியாளர்) |

| **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –</u>** | | | |
|---|---|---|---|
| **வ. எண்** | **தேதி** | **சான்றாவண விபரம்** | **குறிப்பு** |
| எ.ம.சா.ஆ.1 | 20.11.2025 | அதிகாரக் கடிதம் | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | 20.11.2025 | மோகன்குமார் என்பவருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பதற்கு தேடுதல் செய்ததற்கான குறிப்பு | கணிணி நகல் |
| எ.ம.சா.ஆ.3 | --- | TN 78 W 6480 என்ற பஜாஜ் பல்சர் இருசக்கர வாகனத்தின் பாலிசி | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | 28.11.2025 | 1–ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட அறிவிப்பு | அலுவலக நகல் |

| **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் : –** | | | |
|---|---|---|---|
| **எ.ம.சா.ஆ.5** | **---** | **1–ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் அறிவிப்பைப் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக உறை** | **அசல்** |
| **எ.ம.சா.ஆ.6** | **28.11.2025** | **வாகன ஓட்டுனர் மோகன்குமார் என்பவருக்கு அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு** | **அலுவலக நகல்** |
| **எ.ம.சா.ஆ.7** | **---** | **மோகன்குமார் மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை** | **அசல்** |

K BHARATHI

Digitally signed by K BHARATHI
Date: 2026.04.21 14:53:08 +0530

**மோட்டார் வாகன விபத்து கோரிக்கை தீர்ப்பாயர்**
**மற்றும் கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**